# இளந்தாரகை

சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின்

வருடாந்தச் செய்தி மடல்

தாரகை – 04 ஆகஸ்ட் 2012


## அணிக்கு ஏழு பேர் பங்குபற்றும் காற்பந்துப் போட்டிகளில் தொடர்ந்தும் திறமையை வெளிப்படுத்தி வரும் சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம்



மட்டிக்களி கதிரொளி விளையாட்டுக் கழகம் நடத்திய செவணைசைட் போட்டியில் சம்பியனாகிய யங்ஸ்டார் அணியினர் ரா.கஜேந்திரன், சோ.சிறிசங்கர், இ.ரஞ்சித், யோ.அன்ரனிதாஸ், ப.போஜராஜன், செ.ஜோண்சன், நா.மயூரன், ஜெ.தவசீலன், க.ரீஸாந்த்.

மட்டக்களப்பின் காற்பந்தாட்ட வரலாற்றில் அணிக்கு ஏழு பேர் பங்குபற்றும் காற்பந்துப் போட்டிகள் மிகவும் முக்கியம் பெற்றதாக விளங்கி வருகின்றன. நகரத்தை மாத்திரம் மையப்படுத்தாது புறநகர்ப் பகுதிகளையும், கிராமங்களையும் மையங்களாகக் கொண்டு இச்சுற்றுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் அதிகளவு காற்பந்து ரசிகர்களின் மத்தியில் இப்போட்டிகள் இடம்பெற்று வருவதுடன் கிராம மட்டத்திலிருந்து காற்பந்தாட்ட வீரர்கள் உருவாவதற்கான சந்தர்ப்பங்களும் வாய்க்கப் பெறுகின்றன.

இவ்வாறு இடம்பெறும் காற்பந்துப் போட்டிகளில் திறமையினை வெளிப்படுத்தி பரிசுபெறும் முன்னணிக் கழகமாக சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் திகழ்ந்து வருகின்றது.

2011 செப்டெம்பர் மாதத்திலிருந்து இதுவரை நடத்தப்பட்டுள்ள அணிக்கு ஏழு பேர் பங்குபற்றும் காற்பந்துப் போட்டிகள் அனைத்திலும் பரிசு பெற்ற ஒரே கழகமாக சீலாமுனை யங்ஸ்டார் தடம்பதித்துள்ளது. அதாவது 2011.09.24,25 ஆகிய திகதிகளில் சீலாமுனை யங்ஸ்டார் கழகம் சீலாமுனை மைதானத்தில் நடத்திய வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் **முதலாம், இரண்டாம் இடங்களையும்**, 2011.10.22,23ஆந் திகதிகளில் கல்லடி கடல் மீன்கள் விளையாட்டுக் கழகம் கல்லடி விபுலானந்த வித்தியாலய மைதானத்தில் நடத்திய சுற்றுப் போட்டியில் **முதலாவது இடத்தையும்**, 2012.04.21,22ஆந் திகதிகளில் சின்ன ஊறணி சண்றைஸ் விளையாட்டுக் கழகம் சின்ன ஊறணி மைதானத்தில் நடத்திய சுற்றுப் போட்டியில் **இரண்டாமிடத்தையும்**, 2012.06.09,10ஆந் திகதிகளில் மட்டிக்களி கதிரொளி விளையாட்டுக் கழகம் முகத்துவாரம் லைற்கவுஸ் மைதானத்தில் நடத்திய சுற்றுப் போட்டியில் **முதலாம் இடத்தையும்** பெற்றுக்கொண்டுள்ளது. ●

## தொடர்ந்தும் நான்காவது முறையாக காற்பந்தாட்டச் சங்க ஏ பிரிவு சுற்றில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம்.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச் சங்கமாகவுள்ள மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் ஏ பிரிவு கழகங்களிடையே நடத்தப்படும் லீக் சுற்றுப் போட்டியின் வரலாற்றில் தொடர்ச்சியாக நான்காவது தடவையாக இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட கழகங்களுள் ஒன்றாக சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் தனது தடத்தைப் பதிவு செய்துள்ளது.

அதாவது கடந்த 2008 இலிருந்து 2011 வரை மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் லீக் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகளில் சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் பங்குபற்றி வந்துள்ளது. இதில் 2008, 2009 ஆகிய வருடங்களில் முதலாமிடத்தையும், 2010 இல் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளதுடன் 2011 இற்குரிய போட்டியின் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ●

## சிறந்த காற்பந்து வீரர்களுக்கான பரிசு பெற்ற 'யங்ஸ்டார்' வீரர்கள்



**கமலதாசன் ரிசாந்த் :** யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் காற்பந்து அணியிலுள்ள இளம் வீரர்களுள் ஒருவராக க.ரிசாந்த் விளங்கி வருகின்றார். இவர் இவ்வருடம் மட்டிக்களி கதிரொளி விளையாட்டுக் கழகம் நடத்திய செவணைசைட் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசினைப் பெற்றுக் கொண்டுள்ளார். இத்துடன் இவர் மாமாங்கம் ரெட்ணம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய புதுவருட விளையாட்டு விழா 2012 இல் திறந்த மரதன் ஓட்டத்தில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.இவர் யங்ஸ்டார் காற்பந்து அணியின் சிரேஸ்ட வீரரான ஞா.கமலதாசன் அவர்களின் மூத்த மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**தேவசிகாமணி சுதர்சன் :** யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் கோல் காப்பாளர்களுள் ஒருவராக தே.சுதர்சன் அவர்கள் விளங்கி வருகின்றார். இவர் சின்ன ஊறணி சன்றைஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய செவணைசைட் போட்டியில் சிறந்த கோல் காப்பாளருக்கான பரிசினைப் பெற்றுக் கொண்டுள் ளார். இவர் 2012ஆம் ஆண்டு மண்முனை வடக்கு பிரதேச காற்பந்து அணியின் கோல் காப்பாளராகத் தெரிவாகியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**நாகராசா சுதன் (குட்டிமணி):** யங்ஸ்டார் காற்பந்து அணியின் முக்கியமான முன்னணி வீரர்களுள் ஒருவராக குட்டிமணி எனச் செல்லமாக அழைக்கப்படும் நா.சுதன் அவர்கள் விளங்கி வருகின்றார். இவர் சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக்கழகம் நடத்திய செவணைசைட் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசினைப் பெற்றுள்ளார். ●

# 2011- வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி- மீள் பார்வை



மட்டிக்களி கதிரொளி விளையாட்டுக் கழகம் நடத்திய செவணசைட் போட்டியில் சம்பியனாகிய யங்ஸ்டார் அணியினர். கழகத் தலைவர் சீ.நவநேசராசா மற்றும் அணித் தலைவர் ப. சுதாகரன் ஆகியோருடன்

சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 2011 ஆம் வருடத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 24,25 ஆந் திகதிகளில் சீலாமுனையிலுள்ள கழக மைதானத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடனும்,காற்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஆதரவுடனும் நடத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த கழகங்கள் பல கலந்து கொண்டன.

இச்சுற்றுப் போட்டியில் சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் இரு அணிகளுடன் நாவலடி கோல்ட் பிஸ் விளையாட்டுக் கழகத்தின் இரண்டு அணிகளும் அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியினைப் பெற்றுக் கொண்டமை விசேட நிகழ்வாக அமைந்திருந்தது.



மட்டிக்களி கதிரொளி விளையாட்டுக் கழகம் நடத்திய செவணசைட் போட்டியில் இறுதி ஆட்டத்தில் பங்குபற்றிய சண்பிளவர் வீரர்களுடனும், அதிதிகளுடனும்.

இதில் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் இரு அணிகளும் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு சீ.நவநேசராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டி பரிசளிப்பு வைபவத்தில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு வே.ஈஸ்பரன் அவர்களும், மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர்.ஜனாப் என்.ரி.பாறுக் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

பரிசளிப்பு வைபவத்தின் சிறப்பு நிகழ்வாக சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராக இருந்து கழக வளர்ச்சியில் அக்கறையுடன் செயலாற்றி வரும் திரு எஸ்.எஸ்.குருஸ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

## பிரதியமைச்சர் வி. முரளிதரனின் (கருணா அம்மான்) நிதியுதவியில் சீலாமுனை யங்ஸ்டார் மைதானம் புனரமைப்பு



சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டு மைதானத்தை புனரமைக்கும் வேலைகளுக்காக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்கள் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். இந்நிதியுதவியூடாக மைதானத்தின் வலது பகுதிக்கு இரும்பு வேலியிடப்பட்டுள்ளது.



இப்புனரமைப்பு நிகழ்வினை ஆரம்பித்து வைக்கும் வைபவம் கடந்த 29.07.2012 ஆந் திகதி பகல் இடம்பெற்றது.இதில் மீள் குடியேற்ற பிரதியமைச்சர் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வைபவ ரீதியாக புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார். ●

## மறைந்த எமது கழகத்தின் முன்னாள் தலைவர் அமரர் பொ. இருதயநாதன்.



சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் உருவாக்கத்தில் 1977 களிலிருந்து குறிப்பிட்ட சில நபர்கள் மிகவும் அக்கறையுடன் செயலாற்றி வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் எமது நன்றிக்கும் கௌரவத்திற்கும் உரிய பெருந்தகைகளாக உள்ளார்கள்.

இந்தவகையில் எமது கழகத்தின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் அக்கறையுடன் பங்குபற்றி சில வருடங்கள் தலைவராக இருந்து வழிநடத்தி இறுதிவரை கழக ஆதரவாளனாக வாழ்ந்து மறைந்த அமரர் பொ.இருதயநாதன் (குணம்) அவர்களை நாம் நினைவில் கொள்கின்றோம்.

இருதயநாதன் அவர்கள் இளைஞனாக இருந்த காலத்தில் சமூக அக்கறையுடன் வியைாட்டுக் கழகத்தின் வளர்ச்சியில் தனது பங்களிப்பினை வழங்கி வந்துள்ளார்.விசேடமாக கழகத்திற்கான மைதானம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் செயற்பாட்டில் தனது நண்பர்களுடன் சேர்ந்து பங்களிப்பு வழங்கியுள்ளார்.

தாம் 1977 களில் உருவாக்கிய விளையாட்டுக் கழகம் இன்று சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் மட்டக்களப்பின் முன்னணிக் காற்பந்தாட்டக் கழகங்களுள் ஒன்றாக வளர்ந்திருப்பதையிட்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தார். கழகத்தின் வெற்றிச் செய்திகளை உரையாடும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆரம்ப காலத்தில் கழக வளர்ச்சியில் அக்கறை செலுத்திய ஒவ்வொரு நபரைப் பற்றியும் நினைவுபடுத்திக் கொள்வார்.

இவ்வாறு எமது கழகத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கிய எமது மூத்த உறுப்பினரான பொ. இருதயநாதன் அவர்கள் கடந்த 04.02.2012 ஆந் திகதி அமரத்துவமடைந்து விட்டார். அவர் மறைந்தாலும் யங்ஸ்டார் கழகம் உள்ளளவும் அவர் நினைவுகள் இருந்து கொண்டேயிருக்கும். ●


இளந்தாரகை

ஆசிரியர்
து. கௌரீஸ்வரன்
(செயலாளர் - யங்ஸ்டார் வி.க)

தொடர்பு முகவரி
273, பார் வீதி, மட்டக்களப்பு.

அச்சுப் பதிப்பு
வணசிங்கா பிரிண்டர்ஸ்,
126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.

கணினி வடிவமைப்பு
சுபாஜெனி சங்கர்